
கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன்

கவிதைகளில்

# மூதூர் மீனவர்களின் உயர்ச்சி நாட்டம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மூதூர். எம்.எம்.ஏ.அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன் கவிதைகளில்

# மூதூர் மீனவர்களின் உயர்ச்சி நாட்டம்

மூதூர்.எம்.எம்.ஏ.அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்


| | |
|---|---|
| நூலின் பெயர் | : கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் கவிதைகளில் மூதூர் மீனவர்களின் உயர்ச்சி நாட்டம் |
| விடயம் | : ஆய்வு |
| ஆசிரியர் | : மூதூர்.எம்.எம்.ஏ.அனஸ் |
| அட்டைப்படம் | : பி.விஜே |
| வெளியீடு | : மூதூர் கலை இலக்கிய ஒன்றியம் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற்பதிப்பு | : 2015 கார்த்திகை |
| ISBN | : 978-955-42444-1-2 |
| பிரதிகள் | : 500 |
| விலை | : 100.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மூதூரும் மூதூர் மீனவர்களும் உயர்ச்சியுற வேண்டுமெனக் கல்விப் பணிகளுடன் பொதுப் பணிகளிலும் அதிகம் ஈடுபட்டவரும் என்னரும் தந்தையின் நண்பரும், சிறந்த அதிபரும், என் ஆசிரியரும், என் உயர்ச்சியை உள்ளத்தால் உவந்து நின்றவருமான மர்ஹூம்.A.C.கபீர் முகம்மது அவர்கட்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகவுரை

மூதூரின் மொத்த சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்காக உள்ளவர்கள் மீன்பிடித் தொழிலைச் சார்ந்த மக்களாகும். மூதூரின் அரசியலாக, அரசியல் சக்தியாகத் திகழ்பவர்கள் இம்மீனவ மக்களே! மூதூரில் சுமார் 12,000 வாக்குகளைச் கொண்ட அரசியல் பலம் பொருத்திய சமூகமாக மூதூர் மீனவர்கள் திகழ்கின்றார்கள்.

மூதூரில் இம்மீனவ மக்களின் அரசியல் பலமோ, வாக்குப் பலமோ அவர்களின் தொழில் விருத்திக்கும், வாழ்வின் முன்னேற்றத்திற்கும் பெரிதான பங்களிப்புகள் எதனையும் செய்ததாக இல்லை. வறுமைப்பட்ட ஓர் சமூகமாகவும் பாரம்பரிய முறையிலேயே அதிகம் மீன்பிடிக்கும் தொழிலைக் கொண்டவர்களாகவும் இவர்கள் காணப்படுகின்றனர்.

இந்த மீனவ சமூகத்தின் வாழ்விடப் பகுதிகளில் மூதூர் வட்டமெனும் பகுதியில் "போடி கந்தர" எனும் விவசாயப் பரப்பரையில் பிறந்து வளர்ந்த கவிஞர் மூதூர் எல்.எம்.எம்.முகைதீன் மீன்பிடித் தொழிலை அறிந்தவராகவும், அதில் ஈடுபட்டவராகவும், அத்தொழிலாளர்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்கள் அனைத்தையும் நன்கறிந்தவராகவும் திகழ்ந்தார். மூதூர் மீனவர்கள் - உயர்ச்சியுற வேண்டும் அவர்கள் விருத்தியுற வேண்டும். பொருளாதாரவளம் கொண்ட ஒரு சமூகமாக அவர்கள் திகழ வேண்டும் என்ற உன்னத நோக்கங்களும். உயரிய சிந்தனையும் மிகைத்தவராகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டார். இதனால் இம்மீனவர்களின் உயர்ச்சியைக் கருப்பொருளாகக் கொண்டு, அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களைத் தன்கவிதைகள் ஊடாக வெளிப்படுத்தினார். அக்கவிதைகளில் சிலதை எடுத்து ஓர் சிறு ஆய்வுக்குட்படுத்தி அவற்றைக் கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம் முகைதீன் கவிதைகளில் மூதூர் மீனவர்களின் உயர்ச்சி நாட்டம் எனும் ஓர் சிறுநூலாய் வாசகர்கள் பார்வைக்குத் தந்துள்ளேன். இதன்மூலம் மூதூர் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு சிறிதளவேனும் தீர்வு கிட்டுமாயின் என் எழுத்துப்பணி அர்ரத்தமுடையதாக ஆகிய மகிழ்வில் நான் திளைப்பேன்.

இன்னும் ஒரு நூற்றாண்டு காலத்திற்குப் பின்னாவது மூதூர் மீனவ சமூகத்து இளைஞர்கள் தங்கள் சமூகத்தின் எழுச்சிக்கான விருத்திக்கான பொருளாதார முன்னேற்றத்திற்த்திற்கான கொடியை ஏந்தி வருகின்ற பொழுதுகளில் ஆங்கே... அந்தக் கொடியில் நிச்சயமாகா் கவிஞர் மூதூர்.எஸ்.எம்.முகைதீனின் உருவம் தென்படும் என்ற திடமான நம்பிக்கை எனக்குண்டு.

நன்றி

**பெரிய பாலம்** **எம்.எம்.ஏ.அனஸ்**

**மூதூர் - 05** **2015.05.20**

**தொடர்பு – 0776288299**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன் கவிதைகளில் மூதூர் மீனவர்களின் உயர்ச்சி நாட்டம்

மூதூர்.எஸ்.எல.எம்.முகைதீன் கவிதைகள் எனும் நூலில் இடம்பெற்றுள்ள "மூதூர் மீனவர்களுக்கு விடிவுநாள் எப்போதோ" என்ற தலைப்பிலான தன் கவிதையில் கவிஞர் எஸ்எல்.முகைதீன் மூதூர் மீனவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளையும், அவர்கள் அனுபவிக்கின்ற இன்னல்களையும் மிகவும் விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்தியம்பி அவர்களின் வாழ்வில் உயர்ச்சி ஏற்படாதா? அவர்களுக்கு விடிவு கிட்டாதா? என இதய சுத்தியுடன் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றார். இக்கவிஞரின் கவி அடிகளினை முதலில் எடுத்து நோக்குகின்ற பொழுது

"கரைதெரியாத் தூரத்தே கடலினிலே படகோட்டிக்
கனத்தவலை விட்டங்கே கற்பனையில் சாய்ந்திடுவர்.
தரையிலே படுக்கையுடன் தின்றதுவே தான்மிச்சம்
தொழிலதனைச் செய்திடினும் தொலையாத வறுமைதான்
கரையேகும் நேரத்தில் கண்தூக்கம் கலைத்திடவே
கலனெடுத்து நீர்குடித்து கைகடுக்க முயற்சித்து
விரைவாக வலையிழுக்கும் வீரமிகு மீனவரின்
வாழ்வினிலே வசந்தங்கள் வருவதுதான் எப்போதோ!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கவி வரியை எடுத்து நோக்குகின்ற பொழுது மூதூர் மீனவர்கள் தாம் மீன்பிடிக்கச் செல்கின்ற கொட்டியாரக் குடாக் கடலைத் தாண்டிய வெளிக்கடற்பிரதேசம், பரந்து விரிந்த இந்துமா சமுத்திரக் கடற்பிரதேசமாகும். கண்களின் பார்வைக்கு அக்கடலின் கரையே தென்படாது. ஆழமே அறிய முடியாப் பயங்கரக் கடலாகும். அதனால்த்தான் கவிஞர் "கரைதெரியாத் தூரத்தே கடலினிலே **படகோட்டி**" என்று கூறி மூதூர் மீனவர்கள் அனுபவிக்கும் இன்னலை மிக உருக்கமாகக் காட்டுகின்றார்.

அதேபோல் கவிஞரின் அக்கவி அடியின் அடுத்தவரியில்

**"கனத்தவலை விட்டங்கே கற்பனையில் சாய்ந்திடுவர்"**

என்று கூறுகின்றார். அதாவது இக்கடலிலே மூதூர் மீனவர்கள், மிகவும் சிரமம் தாங்கி ஆயிரக்கணக்கான மீற்றர் நீளமுடைய வலைகளை மீன்களைப் பிடிப்பதற்காகக் கடலினிலே விட்டுவிட்டு பல்வேறு கற்பனைகளையும் தம் உள்ளத்தில் கொண்டவர்களாக அதாவது தம் வலையில் நிறைய மீன்படுமா? தம் வறுமை இதனால் நீங்குமா? தம் குடும்பத்து பணத்தேவையைப் பூர்த்தி செய்யலாமா? தம் சேய்களின் படிப்பு என்பன போன்ற பலநூறு கற்பனைகளைத் தம் இதயத்தில் நிறைத்தவர்களாகத் தம் படகுகளில் சிறு தூக்க நிலையைப் போன்ற நிலையில் சாய்நதபடி இருந்திடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு எத்தனையோ சிரமங்களைத் தாங்கி மூதூரில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மக்களின் வாழ்வில் எத்தகைய பொருளாதார முன்னேற்றமும் இல்லா நிலையே தான் காணப்படுகின்றது.

**"தரையிலே படுக்கையுடன் தின்றதுவே தான்மிச்சம்**
**தொழிலதனைச் செய்திடினும் தொலையாத வறுமைதான்"**

எனக் கூறுகின்றார். அதாவது மூதூர் மீனவர்கள் தம் கடல்றொழிலில் ஆர்வமுடன் ஈடுபட்டாளும் கூட அவர்களுக்குப் படுத்துறங்குவதற்குக் கூட வசதியான வீடுவாசல்கள் இல்லாத நிலைதான் காணப்படுகின்றது என்பதையும், அவர்கள் வாழ்வில் எத்தகைய உயர்வும் இல்லை எந்தச் சேமிப்பும் மிச்சமும் கிடையாது. தீராத வறுமைதான் அவர்கள் வாழ்வை வாட்டிக் கொண்டிருக்கின்றது. அவர்கள் உண்ணும் உணவைத் தவிர அவர்கள் வாழ்வில் வேறு எதனையுமே கண்டதில்லை எனக் கூறுகின்றார். தரையையே தங்கள் படுக்கையிடமாக ஆக்கிக் கொண்ட வறுமையின் ஓர் உச்சக்கட்ட சமூகமாக வாழ்ந்து வருகின்றார்களே எனவும் கூறி மூதூர் மீனவர்களின் உயர்ச்சிக்காகக் கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன் ஆதங்கப்படுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கவிஞர் அதே கவி அடியில் தொடர்ந்து பாடுகையில்

**"கரையேறும் நேரத்தில் கண்தூக்கம் கலைத்திடவே**
**கலனெடுத்து நீர்குடித்துக் கைகடுக்க முயற்சித்து**
**விரைவாக வலையிழுக்கும் வீரமிகு மீனவரின்**
**வாழ்வினிலே வசந்தங்கள் வருவதுதான் எப்போதோ"**

எனக் கூறுகின்றாரீர். கடலினிலே பலமணி நேரங்களாக நித்திரையில்லாமல் கண்விழிந்திருப்பதன் காரணமாக மீனவர்களுக்கு தூக்கம் வந்து கொண்டிருக்கும். இந்தத் தூக்கத்தைக் கலைப்பதற்காக அவர்கள் குடிப்பதற்காக கலனில் கொண்டுவந்த நீரைக் குடிப்பார்கள் அவ்வாறு தண்ணீரைக் குடித்தவடன் அவர்களின் தூக்கம கலைந்து போய்விடும்.

பின்பு இம்மீனவர்கள் தங்களுடைய கைகள் கடுக்கக் கடுக்க மிகவும் முயற்சித்து கடலில் விட்ட வலைகளை மிகவும் வேகமாக இழுத்தெடுப்பார்கள். வீரம் செறிந்தவர்களான இந்த மீனவர்களின் வாழ்வினிலே வசந்தங்கள் எப்போதுதான் வரும்? என்று கவிஞர் எஸ்.எல்.எம் முகைதீன் மிகவும் ஏக்கமாகப் பாடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே கவிதையில் கவிஞர் தொடர்ந்து பாடுகையில்

**"நடுங்குகிற உடலோடு நடுச்சாமம் வலையிழுக்க**
**நகருகிற படகுகளும் நடுக்கடலில் தத்தளிக்க**
**கடுத்திடவே கரங்களுமே கலைப்புடனே வலையிழுப்பர்**
**கண்டிடிலோ மீன்களினைக் களிப்பதனில் திளைத்திடுவர்."**

என்கிறார். அதாவது கடலில் வீசுகின்ற காற்றினாலும், குளிர்ச்சியினாலும் மீனவர்களின் உடல்கள் நடுநடுங்க அந்த நடுச்சாம நேரத்திலே தாம் கடலில் விட்ட வலையை மீள இழுப்பர். அந்த வேலையிலே அவர்களின் படகுகளோ. நடுக்கடலில் நகர்ந்த வண்ணம் தத்தளித்துக் கொண்டிருக்கும். மீனவர்களுக்கு அப்போது அவர்களின் கரமெல்லாம் கடுக்கத் தொடங்கி விடும். கலைப்பும் அவர்களை வாட்டும் இவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டுதான் தாம் கடலில்விடட வலையை இழுத்தெடுப்பர். இவ்வாறு இழுத்தெடுக்கும் வலையில் மீன்களைக் கண்டுவிட்டால் அவர்கள் சந்தோசத்தில் மூழ்கிவிடுவர். என்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கவிஞர் பாடுகையில்

**"இடுப்பையே வலைத்தங்கே இழுத்தவலை மீனின்றேல்**
**இருந்திட்ட பலமெல்லாம் இல்லாது மறைந்திடுமே**
**எடுத்தேதான் வலையேற்றி ஏக்கமாய் மூச்செறிந்து**
**எதுவுமே பேசாமல் ஏகிடுவர் கரைதன்னை"**

என்கிறார். அதாவது அந்தக் கடலினிலே இடுப்பையே வலைத்து, மிகவும் கஷ்டப்பட்டு கடலில் விட்ட வலையை மீளவும் இழுத்தெடுப்பார்கள். அப்போது அந்த வலையிலே மீன்கள் அகப்படவில்லையென்றால் அந்த மீனவர்கள் மிகவும் சோர்ந்து போய் விடுவார்கள். அவர்களுக்கு இருந்த தைரியமும் பலமும் இல்லாமல் எங்கோ மறைந்து போன ஓர் நிலைமை தோன்றும். எனினும் வலையை இழுத்துத் தங்கள் படகில் ஏற்றியவர்களாகவும், ஏக்கப் பெருமூச்சு விட்டவர்களாகவும் கவலை தோய்ந்தவர்களாகவும் எதுவுமே பேசாமல் மௌனமாகக் கரையை நோக்கித் திரும்புவார்கள் என்று கூறுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கவிஞர் மற்றுமோர் கவிதை அடியில்

"பெருமீன்கள் மூச்செறியும் பேரலைகள் உயர்ந்து எழும்
பெருகிவரும் இரைச்சல்கள் பல்திசையும் ஒலித்திடுமே!
அருகினிலே ஆமையுடன் அலறிடுமே உயிரிகளும்
அமைதியது நிலவாதோ ஆளரவம் கேட்டிடுமே!
பெருகிவரும் பயமங்கே பேய்யரவ மென்பார்கள்
பேசாமல் ஏதோவெனப் பெருமூச்சு விட்டிடுவர்
இருந்தாலும் இடைச்சாமம் இழுப்பார்கள் வலையதுவும்
இந்நிலையின் மீனவர்க்கு இல்லாமை வாழ்வதுவே!"

என்று பாடுகின்றார்.

அதாவது அந்த ஆழ்கடலிலே பெருமீன்களின் மூச்செறியும் சப்தங்கள் மிகவும் பயங்கரமானதாக இருக்கும். ஏதோ! தமது மீன்பிடிப்படகுகளையும் புரட்டிவிடுமோ! அந்த அளவுக்கு அதனுடைய மூச்செறியும் சப்தம் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அக்கடலிலே பெரும் பெரும் அலைகள் மிகவும் உயர்ந்து எழும். இவ்வலைகள் படகினை கடலில் மூழ்கச் செய்துவிடுமோ என்ற பயங்கரமும் காணப்படும். அத்துடன் இக்கடலில் எல்லாப்பக்கங்களிலிருந்தும் பெரும் இரைச்சல்கள் பெருகி வந்து கொண்டிருக்கும் இவ்இரைச்சல்களும் இந்த மீனவர்களுக்கு கடலில் ஓர் பயங்கரத்தை ஏற்படுத்தும் கடல் ஆமைகளும், கடலில் வாழும் பல்வேறுபட்ட [illegible]பிரிகளும் அலறும். இந்த அலறும் சப்தங்களும் பயங்கரத்தை உருவாக்கும். அந்த ஆழக்கடலில் அமைதியே நிலவாது.

அத்துடன் இந்தக்கடலிலே மனிதர்களின் சப்தத்தைப் போன்ற ஓசைகளும் கேட்டிடும். இவ்வேளைகளில் மீனவர்களுக்குப் பயம்கூட ஏற்பட்டுவிடும் இதனைப் "பேய்யரவம்" என்றே இம்மீனவர்கள் சொல்வார்கள். இவ்வேளைகளில் எதுவுமே பேசாத மௌனமான நிலைக்காகி ஏக்கப் பெருமூச்சு விட்டவர்களாகக் காணப்படுபவார்கள் என்னதான் கடலிலே நேர்ந்தாலும் எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு நடுச் சாம வேளையிலே தாங்கள் கடலில் விட்ட வலைகளை மிகவும் சிரமம் தாங்கித் தம் படகுக்குள் ஏற்றிக் கொள்வார்கள். இத்தகைய சிரமங்களைத் தாங்கித் தினமும் கடற்றொழிலில் ஈடுபடும் மூதூர் மீனவர்களின் வாழ்க்கையோ மிகவும் வறுமை நிலையில் இருக்கின்றதே எனக் கூறிக் கவிஞர் எஸ்.எல்.எம்.முகைதீன் வேதனைப்படுகின்றார்.

மூதூர் மீனவர்களின் உயர்ச்சி நாட்டத்தை கருதி கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன் தனது மற்றுமோர் கவிதை அடியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எல்லாவலை களுமங்கே ஏதோசுருண் டிருந்திடுமே!
எடுக்கவுமே முடியாது என்னவோ பெருமீனோ!
கல்லையே நிகர்த்தாய்க் கனமாகும் முழுமூச்சாய்
கைகளுமே புண்ணாகக் கலைப்புற்றே அருகெடுத்து
வெல்லவே இயலானை வென்றிட்ட மனநிலையில்
வெறும்ஏமாற் றமுடனே வெட்டிடுவர் வலையினையும்
சொல்லிட[illegible] முடியாத சோகத்தில் மூதூரில்
சீவிக்கும் மீனவர்கள் சுகநாளும் எப்போதோ!"

என்று பாடுகின்றார்.

அதாவது கடலிலே இந்த மீனவர்கள் விட்ட வலைகள் யாவும் சுருண்டுபோய், அவற்றை மீண்டும் இழுத்தெடுக்க முடியாத அளவுக்குக் காணப்படும். மீன்கள் பட்டுத்தான் வலைகள் இவ்வாறு சுருண்டிருக்கிறதோ! அல்லது கடற்பாறைகளின் கற்களில் சிக்கி வலைகள் சுருண்டிருக்கிறதோ! என எண்ணியவர்களாக அந்த மீனவர்கள் மிகவும் முயற்சி செய்து தங்களுடைய கைகள் கூடப் புண்ணாகும் அளவுக்கு, வெல்ல முடியாதவனை வென்றிட்ட மனநிலையில் அந்த வலையை தம் படகுவரை கலைப்புற்ற வண்ணம் இழுத்தெடுப்பர். அவ்வேளை ஆங்கே இந்த மீனவர்களுக்குப் பெரும் ஏமாற்றம் ஏற்பட்டுவிடும். அந்த வலையில் பெரும் கனமாக இருந்தது மீன்கள் அல்ல. பெரும் கற்கள் ஆகும்.இந்த நிலையில் மீனவர்கள் வலையை வெட்டியே கற்களை அகற்றிடுவர். இத்தகைய நிலையிலே வாழ்கின்ற மூதூர் மீனர்களுக்கு வளவாழ்வு வருவது எப்போதோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறி கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன் மீனவர்களின் உயர்ச்சி நாட்டத்தில் திளைக்கின்றார்.

மேலும் கவிஞர் பாடுகையில்,

**“காற்றுடனே கடலதுவும் கனமாகச் சீறிவரும்**
**கார்மேகம் திரண்டங்கே கடும்மழையும் பொழிந்திடுமே!**
**சீற்றமுடன் புயலுமே சிலவேளை வந்திடுமே!**
**செய்வதறி யாமலே செயலிழந்து கலங்கிடுவர்**
**ஏற்றதிசை அறிந்திடவும் ஏதுமே! புரியாமல்**
**ஏகனையே உதவிக்கு ஏங்கியே அழைத்திடுவர்**
**ஏற்றமே இல்லாத ஏழ்மைநிலை மீனவர்க்கு**
**என்றுதான் வந்திடுமோ ஏற்றமது வாழ்வினிலே”**

என்று குறிப்பிடுகின்றார். இங்கு மூதூர் மீனவர்கள் கடலில் மீன்பிடித்தலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற போது, சில வேளைகளில் காற்றும் கனமாக வீசும் இதனால் கடலும் மிகப்பயங்கரமாகச் சீறி எழும் மழைமேகங்கள் யாவும் ஒன்று திரண்டு கடலில் பெரும் மழை பொழியும். இத்தகைய இன்னலுக்கு மத்தியிலே என்ன செய்வதெனப் புரியாதவர்களாக, செயலிழந்த நிலையில் கலங்கிப் போனவர்களாக இந்த மீனவர்கள் காணப்படுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஆழக்கடலில் இவ்வேளையில் எந்தத்திசை என்று கூட அறியாதவர்களாக இந்த மீனவர்கள் திண்டாடுவர். இந்த வேளையில் இறைவனையே உதவிக்கு அழைத்து தங்களைக் காப்பற்றுமாறு அவனிடம் இறைஞ்சி நிற்பர். இவ்வாறு ஏற்றமில்லாத ஓர் நிலையில் வாழ்கின்ற மூதூர் மீனவர்களுக்கு தம் வாழ்வினிலே ஏற்றம் என்றுதான் வந்திடுமோ! என்று கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன் தன் கவிதைகள் ஊடாக ஆதங்கப்படுகின்றார்.

இதுமட்டுமல்ல கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன் மூதூரில் மீனவப் பிரதேசமாகிய வட்டம், தக்வா நகர், அக்கரைச்சேனை, கேணிக்காடு, நெய்தல் நகர் போன்ற பகுதி மக்களின் கல்விக்கு வித்திட்ட பாடசாலையாகிய அல்.ஹிலால் மகாவித்தியாலயத்தைப் பற்றியும் அது எந்தளவுக்கு மீனவர்களின் கல்விக்கு பெரும் பங்களிப்பு நல்குகின்றது என்பது பற்றியும் பாடுகையில்

**"கிழக்கும் கதிரோன் கண்டிடுமுன்**
**கடலலை மோதிடும் மீனவர்கள்**
**ஒழுங்காய்க் கல்வியில் மேம்படவே**
**ஓங்கிய பள்ளியைப் புகழ்ந்திடுவோம்"**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பாடுகின்றார். அதாவது மூதூர் மீனவர்கள் அதிகாலையில் கடலுக்குச் சென்று விடுவார்கள். அதாவது கிழக்கில் சூரியன் உதிப்பதற்கு முன்பாகவே அவர்கள் கடலலைகளுடன் போராடித் கடலில் தம் படகை ஓட்டிச் செல்வார்கள். இந்த மீனவ சமூதாயம் கல்வியில் உயர்ச்சி காண உயர்ந்த நிலையிலே காணப்படும் அல்.ஹிலால் பள்ளிக் கூடத்தைப் புகழ்ந்திடுவோம் என்று கவிஞர் கூறுகின்றார். அதாவது மீனவர்கள் கல்வியில் உயர்ச்சியுற்ற சமூகமாக மாற வேண்டும் என வாஞ்சை கொள்கிறார்.

மேலும் மூதூர் மீனவர்களின் உயர்ச்சி நாட்டத்தைத் தம் உள்ளத்தில் நிறைத்த கவிஞர். மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன் அப்பாடசாலை பற்றி மேலும் பாடுகையில்

**"சித்திரக் கைப்பணிச் சிற்பிகளுடன்**
**சீரிய பேச்சினில் வீரியரும்**
**முத்தமிழ் அறிஞரும் பெருகிடவே**
**முயலும் பள்ளியைப் போற்றிடுவோம்"**

**"வாதம் புரியும் வக்கீலுடன்**
**வர்த்தக விஞ்ஞா னவிற்பனரும்**
**வேதியர் வித்தக வேந்தர்களும்**
**வழங்கும் பள்ளியைப் புகழ்ந்திடுவோம்"**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறார். அதாவது சித்திரம் கைப்பணிச் சிற்பிகள். சிறந்த பேச்சளார்கள் முத்தமிழ் அறிஞர்கள், சட்டத்தரணிகள், வர்த்தக, விஞ்ஞான பட்டதாரிகள், வைத்தியர்கள், அறிவியல் மேதைகள் போன்றோரை அல் - ஹிலால் பள்ளிக் கூடம் மீனவ சமூகத்தில் இருந்து உருவாக்கிதருவது கண்டு உவகை கொள்ளும் கவிஞர் இதன் மூலம் மூதூர் மீனவ சமூகத்தின் உயர்ச்சியைத் தம் பார்வையினூடே காண்கிறார்.

இவ்வாறு மூதூர் மினவ சமூகத்தின் பொருளாதாரம், கல்வி, வாழ்க்கைத்தர உயர்ச்சிபற்றிக் கவிகள் யாத்த கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன் நாமம் மூதூர் மீனவர்களின் முன்னேற்றத்தின் பொழுதுகளிளெல்லாம் ஓங்கி ஒலிக்கப்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பார்வையில் கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன்

சேற்றிலே முளைத்த செந்தாமரையாய் கூழாங்கல்லிடை உருவான மாணிக்கமாய் மூதூர் தக்வாநகர் வட்டம் என்னும் கிராமத்தில் சதக்கு லெவ்வை அசியா உம்மா என்பவருக்கு மகனாக 08.05.1937ம் ஆண்டு கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீனின் பிறந்தார். இந்த வட்டம் எனும் பிரதேசத்தின் ஸ்தாபகரும், ஸ்தாபக குடிமகனுமாக இவருடைய தந்தையார் சீனிமெய்யதீன் சதக்கு லெவ்வை அவர்களே இருந்தார். இவர் வட்டத்து மண்ணில் குடியேறியது விவசாய நோக்கத்திற்காகவேயன்றி கடலை அண்மித்திருப்பதன் காரணமாக மீன்பிடித்தொழிலை நோக்கமாகக் கொண்டல்ல. "போடி கந்தர" என்னும் உயரிய விவசாயப் பரம்பரையைச் சேர்ந்த சதக்கு லெவ்வை அவர்கள் வட்டத்து மண்ணிலே மா, பலா, தென்னை போன்ற பல்லாண்டு பயிர்களையும் மரவள்ளி, வற்றாளை போன்ற சிறு பயிர்செய்கையிலும் ஈடுபட்டு அதன் மூலம் வருமானத்தை ஈட்டிக்கொண்டார். இன்றும் இந்த வட்டத்து மண்ணில் சதக்கு லெவ்வை அவர்களின் குடும்பத்தவர்களே அதிகம் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன் தனது ஆரம்பக்கல்வியை மூதூர் கோட்டையாற்று பள்ளிக்கூடத்தில் (இன்றைய மூதூர் மத்திய மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியப்பாடசாலையில் கற்றார்) வாசிப்பதில் அதிக ஆர்வம் கொண்ட இவர் நிறைய நூல்களை வாசித்தறிந்து தன் அறிவை விரிவாக்கிக் கொண்டார். அத்துடன் இவர் இயற்கையாகவே அறிவு, ஞானம் வாய்க்கப் பெற்றவராகவும் திகழ்ந்தார். ஐம்பெரும் காப்பியங்கள், திருக்குறள், சீறாப்புராணம், திருக்குர்ஆன், தெளிவுரை, ஹதிஸ் கிரந்தங்கள் போன்ற பல்வேறுபட்ட நூல்களையும் வாசித்தறிந்து அவற்றில் நல்ல தேர்ச்சியும் பெற்றிருந்தார். இதனால் தமிழ் இலக்கிய அறிவும் சன்மார்க்க அறிவும், பொதுஅறிவும் அரசியல் ஞானமும் இவரை அணிசெய்து நின்றன. தூரநோக்கும், பரந்த சிந்தனையும் இவரை மேலும் மெருகூட்டின.

இவர் ஓர் ஞானியாக, ஓர் மேதையாக, ஓர் மாமனிதராக எம்மத்தியில் வாழ்ந்து, மறைந்து போன ஓர் பெருந்தகை இவரைப் பற்றிய உண்மையான தெளிவு ஊரில் அநேகருக்குத் தெரியாது எந்த இடத்திலும், எவ்வேளையிலும், எவ்விடயத்தையும் நன்கே கதைக்கும் தத்துவமும் திறனும் கொண்டவராக காணப்பட்டார். உண்மை, நேர்மை, நீதி, மனுதர்மம் என்பவற்றிற்கு உயரிய இலக்கணமாகவும், முன்மாதிரியாகவும் இவ்வூரில் வாழ்ந்தார். பணத்திற்கோ, அதிகாரத்திற்கோ என்றுமே அடிபணியாதவர். நல்ல உடலமைப்பும், பலமும், உயரமும், தோற்றமும் கொண்ட இவருடன் யாரும் மோதுவதற்கு அச்சத்தை ஏற்படுத்தும். அதே நேரத்தில் பிழையைக் காணின் அதிகம் கோபம் கொள்ளக்கூடியவராகவும் காணப்பட்டார். பாம்பின் காலை பாம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் அறியும் என்பதற்கொப்ப அவருடைய தாய் தன்மகனின் பலத்தையும், கோபத்தையும் நன்கறிந்திருந்ததனால் மகனே! நீ யாரிடமும் சண்டையிடக் கூடாது. அப்படிச் சண்டையிட்டால் நான் உனக்கு ஊட்டிய பால் “கறாம்” (விலக்கப்பட்டது) ஆகும் எனக்கூறி இவரிடம் தாய் சத்திய வாக்கைப் பெற்றதாக அறியக்கூடியதாக உள்ளது. இதனால் அவர் பிறருடன் சண்டையிடுவதைத் தவிர்த்தவராகவே வாழ்ந்து வந்தார்.

மேலும் கறைபடியாக் கரம் இவர் உடைமையாகும். தன் உடலில் ஓடுகின்ற ஒவ்வோர் துளி இரத்தமும் தன் நேர்மையான உழைப்பின் மூலம் ஓடுவதாகவே இருக்க வேண்டும் என்பதில் மிகமிகக்கரிசனையாக இருந்தார். தனக்கு எது நேர்ந்தாலும் எல்லாம் இறைவன் விதிப்படித்தான் நடக்கிறது என்பதில் மிகஉறுதியாக இருந்தார். எதையும் தாங்கும் மனோ வலிமையும் திடனும் கொண்டிருந்தார். இறையச்சம் கூடிய ஒருவராகக் காணப்பட்டார்.

இவர் ஓர் விழாவிலோ, கூட்டத்திலோ, உரையாற்ற எழுந்துவிட்டால் அவர் அக்கணம் ஓர் நாவலராக மாறிவிடுவார். அடுக்கு மொழிகளுடன், திருக்குர்ஆன் உதாரணமும் திருநபியின் கூற்றுக்களும், திருக்குறளும், தமிழ் இலக்கியச் செய்யுள்களும் பொன் மொழிகளும், அவர் வாயில் இருந்து வளமாக, வரமாக வந்து கொண்டே இருக்கும். ஓர் மனிதனின் வாய்வார்த்தைகளில் இருந்து, அவன் நடை, உடைகளில் இருந்து அவன் எப்படிப்பட்டவன் என்பதையும், அவன் உள்ளத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதிந்திருக்கும் விடயங்களையும் அறிந்து கொள்ளும் அபார ஆற்றல் பெற்றிருந்தார். இன்றைய ஓர் விடயம் நாளை எவ்வாறு இருக்குமென்று முன்கூட்டியே சொல்லக்கூடிய தீர்க்கதரிசனப் பார்வையும் பெற்றுத் திகழ்ந்தார். மகாகவி அல்லாமா இக்பாலுக்கு இறைவன் வழங்கிய "ஒளிமிகு பார்வையைப் போல்" கவிஞர் எஸ்.எல்.எம்.முகைதீனுக்கும் இறைவன் ஒளிமிகு பார்வையை வழங்கியிருந்தான். அதன் காரணமாக எது சரி, பிழை என்று உரைக்கக்கூடிய உயரிய தன்மை பெற்றிருந்தார்.

புன்னகையும், புதுப்பொழிவும் என்றும் இவர் முகத்தில் தவழும், எனது உடன்பிறந்த சகோதரர் மர்கூம்.ஏ.சி.கபீர் முகம்மது (அதிபர்) அவர்களின் மிகமிக நெருங்கிய நண்பர் இவர். இவரும் எனது சகோதரர் ஏ.சி.கபீர் முகம்மது அவர்களும் ஒன்றாகக் கூடிவிட்டால் அங்கே உரையாடல் கலைகட்டிவிடும் நகைச்சுவையும் கலகலப்பும் சிரிப்பொலியும் மேலோங்கி நிற்கும்.

அன்று படிப்பின் வாசனையே அற்றிருந்த மூதூர் அக்கரைச்சேனைப் பகுதியில் ஓர் பாடசாலை உருவாக (தி/அல்ஹிலால் மகாவித்தியாலயம்) மிகவும் பாடுபட்டவர். அதன் முக்கிய ஸ்தாபகர். இவர் காட்டுக்குச் சென்று கம்புதடி வெட்டிவந்து கலைக்கூடம் கட்டிவிட்டு, ஒதுக்கிச் சென்றுவிடவில்லை. தான் மரணிக்கும் வரைக்கும் அல்ஹிலாவின் வளர்ச்சிப்படிகளில் தனது காலை நன்கு பதித்தவர். அப்பாடசாலையின் அபிவிருத்திக் குழுச் செயலாளர், உறுப்பினர் என்றெல்லாம் வருடக் கணக்கில் பதவி வகித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தி/அல்.ஹிலால மகாவித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றிய காலகட்டத்திலும் எனக்கு பள்ளிக்கூட விடயத்தில் அதிகூடிய ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் நல்கினார். நானும் பலவிடயங்களில் அவரின் ஆலோசனையைப் பெற்று கலைக்கூட உயர்ச்சிக்காகச் செயலப்பட்டதை மீட்டுப்பார்க்கின்றேன். கவிஞர் எஸ்.எல்.எம்.முகைதீன் அவர்களை இவ்வேளையில் மிகவும் மரியாதையுடன் நினைத்துப் பார்க்கின்றேன்.

மேலும் இவர் இந்த ஊரில் மீனவர்களின் உயர்ச்சியைக் கருத்தில் கொண்டு முதலாவது மீன்பிடிச்சங்கத்தை ஸ்தாபித்தார். தொடர்ந்தேர்ச்சியாகத் தானே அச்சங்கத்தின் செயலாளராகக் கடமையாற்றி மீன்பிடி அதிகாரிகளுடனும், அரசியல்வாதிகளுடனும் தொடர்பு கொண்டு பல பெரிய மீன்பிடி இயந்திரப்படகுகளை முதன்முதலாக மூதூர் மீனவர்கள் பெற வழிவகுத்தார்.

அதே போல் அக்கரைச்சேனை கிராம முன்னேற்றச் சங்கத்தின் தலைவராகவும் தொடர்தேர்ச்சியாக பல வருடங்கள் பணியாற்றிய இப்பகுதியின் பல்வேறுபட்ட அபிவிருத்திக்கும் முக்கிய மூலவராகத் திகழ்ந்தார். அக்கரைச்சேனை முகைதீன் ஜும்மா பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினராகவும் செயலாளராகவும் பல வருடங்கள் நற்பணியாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் நெங்தல் நகர் ஹிழ்று ஜும்மா பள்ளிவாயல் வட்டம் ஜும்மா பள்ளிவாயல், தக்வாநகர் ஜும்மா பள்ளிவாயல் ஆகியவற்றின் முக்கிய ஸ்தாபராகவும் திகழ்ந்தார். அத்துடன் தான் வாழ்ந்த மூதூர் நெய்தல்நகர் பகுதியில் "மனாறுல் குதா" எனும் பெயரில் பெண்களுக்கான குர்ஆன் பாடசாலையின் முக்கிய ஸ்தாபகர்களில் ஒருவராகவும் இருந்ததுடன் அதன் செயலாளராகவும் கடமையாற்றினார். தான் மரணிக்கும் வரை தினமும் அதன் பணிகளில் ஈடுபட்டு வந்தார்.

மேலும் அன்று எழுதப்படிக்கத் தெரியாத பிரதேசமாக இருந்த அக்கரைச்சேனைப் பகுதியில் பொதுமக்கள் அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதுதல், விண்ணப்பம் நிரப்புதல் போன்ற பல்வேறு தேவைகளுக்கும் கவிஞர் எஸ்.எல்.எம்.முகைதீன் அவர்களையே நாடிச் செல்வர். இவ்வாறு தன்னுடைய வாழ்வின் கூடிய காலப் பகுதியை சமூக சேவைக்காகவே அர்ப்பணித்த ஓர் மாமனிதரைப் பற்றி இந்நூலில் எழுதக் கிடைத்தமையையிட்டு நான் உண்மையிலேயே பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அத்துடன் இவர் நாட்டுவைத்தியம் பேய், பிசாசு, மந்திரதந்திரங்கள், ஆத்மீக வைத்தியம் என்பவற்றிலும் நன்கு தேர்ந்தவராகத் திகழ்ந்தார். அக்கரைச் சேனைப் பிரதேசத்தில் (வட்டம், தக்கவா நகர் உட்பட) அவர் வாழ்ந்த காலத்தில் குழந்தையைப் பிரசவிக்கும் தாய்மார்கள் எல்லாம் இவர் ஓதிய வெற்றிலையைச் சாப்பிட்டால் பிரசவம் இலேசாக அமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தார்கள் மேலும் இவர் தற்காப்புக் கலையான சீனடி, சிலம்படி, கம்புவீச்சு போன்ற விளையாட்டு வித்தையிலும் நன்கு தேர்ச்சி பெற்றவராகத் திகழ்ந்தார்.

அத்துடன் இவர் இப்பிரதேசத்தில் பொதுமக்களின் பிரச்சினைகளான, குடும்பப் பிரச்சினைகள், காணிப் பிரச்சினைகள், பணக்கொடுக்கல் வாங்கல்கள் பிரச்சினைகள் போன்ற இன்னோரன்ன பல பிரச்சினைகளுக்கும் தீர்வு கூறுவார் மக்கள் தீர்வு வேண்டி அதிகம் இவரையே நாடிச் செல்வர். இவருடைய தீர்ப்பை மரியாதையுடன் மக்கள் அதிகம் ஏற்றுக் கொள்வார். தம் வாழ்நாளில் இத்தகைய ஆயிரமாயிரம் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்த பெருமனிதனின் பணியை மீட்டிப் பார்க்கும் போது அவர் மீதான மரியாதை என்னில் நிறைகிறது.

"போடி கந்தர" எனும் விவசாயப் பரம்பரையில் பிறப்பெடுத்த இவர் மிகச்சிறந்த விவசாயியாகவும் திகழ்ந்தார். மண்வெட்டி, கத்திதனைத் தன்கரத்தில் அவர் ஏந்திவிட்டால் அவருக்கு நிகராக யாருமே வேலை செய்ய முடியாது. வேகமும், அழகும் அவர் பணியை அணிசெய்து நிற்கும் அதேபோல் மிகச்சிறந்த வியாபாரியாகவும் காணப்பட்டார். (சில்லறைக் கடை, அரிசி ஆலை, மொத்த விற்பனைக் கடைகளையும் நடத்தினார்) கடற்றொழிலும் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தார். கடலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீந்துதல், கடலின் அடியில் சுளி ஓடுதல் போன்றவற்றிலும் நல்ல அனுபவம் பெற்றிருந்தார்.

ஒரு பூரண மனிதனாக ஊரில் வாழ்ந்த பெரியார் மூதூர் எஸ்.எல்.எம்.முகைதீன் அவர்கள் மூதூரின் பெரும்புலவர் உமர் நெய்னார் அவர்களின் புத்திரியான சபியா உம்மா என்பவரை மணந்தார். இதன் மூலம் அவருக்கு

01. எம்.எம்.ஏ.அனஸ் (தொழில் உறவு அதிகாரி - இலங்கை துறைமுக அதிகார சபை)
02. எம்.எம்.ஏ.அஜிஸ் (போக்குவரத்துச் சபை - மூதூர்)
03. எம்.எம்.ஏ.அறூஸ் (வலயக்கல்வி அலுவலகம் - மூதூர்)
04. எம்.எம்.எம்.அனிஸ் (ஆசிரியர்)
05. எம்.எம்.எம்.அயாஸ் (வைத்தியர்)
06. எம்.எம்.எம்.அப்பாஸ் (ஆசிரியர்) ஆகிய ஆறு ஆண் மக்களும்
07. அசறயா வகார்தீன்
08. மர்ளியா இம்டாட்
09. ஜாபிறா றவுஸ்தீன்
10. ஆபிதா முகைதீன்

ஆகிய நான்கு பெண் மக்களுமாக மொத்தம் பத்துப்பிள்ளைச் செல்வங்கள் அவருக்குக் கிடைத்தன. அவரின் வாரிசாக இவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வுலகில் உன்னத வாழ்வு வாழ்ந்த மாமனிதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்.எல்.எம்.முகைதீன் அவர்கள் 01.05.2008ம் திகதி தனது 71ம் வயதில் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

"ஓர் தந்தை தன் மரணத்திற்குப் பின் தன் தனயர்களில் வாழ்கிறான்" என்ற தத்துவ மொழிக்கொப்ப கவிஞர் எஸ்.எல்.எம்.முகைதீன் அவர்கள் மரணமடைந்து விட்டாலும் அவரின் நினைவாக அவரின் நிழலாக அவரின் தனயர்கள் அவரின் கொள்கை செயற்பாடுகளின் நெறியே வாழ்ந்து கொண்டிருப்பதை கண்டு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். குறிப்பாக அவரின் மூத்த மகனான இந்நூலின் தொகுப்பாசிரியரும் எனது மாணவனுமான மூதூர் எம்.எம்.ஏ.அனஸ் சைகக் காணும் போதெல்லாம் எனக்கு அவரின் தந்தையின் ஞாபகம் தான் வரும்.

தன் தந்தையைப் போலவே சகல தன்மைகளும் பொருந்தியவராக இவரும் உள்ளமையைக் கண்டு நான் பெரிதும் உவகையுறுகின்றேன். கவிஞர் மூதூர்.எஸ்.எல்.எம்.முகைதீன் அவர்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் நல்லருள் புரிய வேண்டுனெ இறைஞ்சுகிறேன்.

ஏ.சீ.எம்.மக்கீன்
(முன்னாள் அதிபர்)
பிரதான வீதி, மூதூர்

**(கவிஞர் மூதூர்எஸ்.எல்.எம்.முகைதீன் கவிதைகள் நூலில் இருந்து)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீனவர்கள் மூதூாில் முன்னேற்றம் இல்லாது
ஆனபெரும் இன்னலிலே ஆட்பட்டுப் - போனதனைக்
கண்டு கவிமுகைதீன் கண்ணீர்க் கவிதந்தார்
எண்ணியதை நானாய்ந்தேன் எண்ணு

**மூதூர். எம்.எம்.ஏ.அனஸ்**

ISBN 978-955-42444-1-2

ART 0776566173

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org